தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை – திருமதி. ந.கீதா எம்.எஸ்சி, எம்.எட்,
நி.மு.எண். 1048 / அ1 / 2021 நாள்.15.03.2021

பொருள் தமிழ்நாடு அமைச்சுப் பணி – பணிவரன்முறை– பாலக்கோடு கல்வி மாவட்டம் பாலக்கோடு அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.த.சண்முகம் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை ஆணை வழங்குதல் – சார்பாக.

பார்வை
1. சென்னை–6, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் குழு துணை செயலாளரின் கடிதம் எண்.1157/PSD-H1/2019 நாள். 18.02.2019
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 195/அ4/இ1/2019 நாள். 23.02.2019
3. தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண் 1090/அ1/2019 நாள் 27.02.2019
4. அரசாணை எண் 101 பள்ளிக் கல்வி (வரவு செலவு) துறை நாள் 18.05.2018
5. பாலக்கோடு மாவட்டக் கல்வி அலுவலர் கடித ந.க.எண் 3030/அ1/2020 நாள். 09.02.2021

ஃஃஃ

பார்வை (1)–ல் கண்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி 2015–16, 2016–17 & 2017- 18 ஆம் ஆண்டில் நேரடி நியமனம் மூலம் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு (Group-IV) நியமனம் செய்ய தேர்வு செய்யப்பட்டு பார்வை (3)ல் கண்ட தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி தருமபுரி மாவட்டம் பாலக்கோடு கல்வி மாவட்டம், பாலக்கோடு அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் **இளநிலை உதவியாளராக** 28.02.2019 முற்பகல் பணிநியமனம் பெற்று பணிபுரிந்து வரும் **திரு.த.சண்முகம்** என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்திட கோரிய கருத்துருக்களை பார்வை 5ல் கண்டவாறு பாலக்கோடு மாவட்டக் கல்வி அலுவலர் கடிதத்தின்படி பணிந்தனுப்பியுள்ளார்.

மேற்கண்ட கருத்துருவினை கூர்ந்தாய்வு செய்து, பார்வை (4)ல் கண்ட அரசாணையில் இளநிலை உதவியாளருக்கான நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், கலம் 2ல் கண்ட பணியாளருக்கு கலம் 4ல் கண்ட நாளில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | திரு.த.சண்முகம்<br>இளநிலை உதவியாளர்<br>அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி<br>பாலக்கோடு, தருமபுரி மாவட்டம் | 28.02.2019 முற்பகல் | 28.02.2019 முற்பகல் |

... 2 ...

சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள 2015–2016,2016–2017 & 2017–2018 ஆண்டுகளில் தொகுதி IV ன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டு இந்த பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டுக் காலம் தகுதிக்காண் பருவ காலமாக நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தகுதிகாண் பருவத்தில் வரையறுக்கப்பட்ட மாவட்ட அலுவலக நடைமுறை தேர்வினையும், இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியினையும் (பவானிசாகர் பயிற்சி) முடித்தல் வேண்டும். தகுதிகாண்பருவம் முடித்தமைக்கான ஆணை பெறப்பட்ட பின்னரே இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்க வேண்டும்.

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரங்களை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

பணியாளரின் சார்பாக பெறப்பட்ட பணிப்பதிவேடு தொகுதி –1 இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலை அனுப்பி வைத்திட சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு – பணிப்பதிவேடு அசல் 1 தொகுதி

முதன்மைக் கல்வி அலுவலர்,
தருமபுரி

பெறுதல்

தலைமை ஆசிரியர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி , பாலக்கோடு.

நகல் –மாவட்டக் கல்வி அலுவலர், பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்
நகல் – திரு.த.சண்முகம், இளநிலை உதவியாளர்,அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி ,பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்.